**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**
**E.A.5/2024 in E.P.4/2012 in O.S.403/1988**

பெயர்–திரு. துரைசாமி நாள்.20.01.2026

ம.த.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**ம.த.சா.1 : 2 முதல் 5, 10, 11 எதிர்மனுதாரதர்கள் தரப்பு குறுக்கு விசாரணை–**

1) நான் தாக்கல் செய்துள்ள குடும்ப அட்டை மற்றும் ஆதார் அடையாள அட்டையில் எப்போது எனது பெயர் சேர்க்கப்பட்டது என தேதி குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. குறிப்பிடப்பட்டுள்ளது. குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டையில் எனது விலாசம் ஊரடி தோட்டம் என்று உள்ளது என்றால், சரிதான். மனு சொத்து உள்ள முகவரி அம்பிநாய்க்கர் தோட்டம் என்றால், சரிதான். எனவே, குடும்ப அட்டை மற்றும் ஆதார் அடையாள அட்டையின் முகவரிகள் மனு சொத்திற்கான முகவரி அல்ல என்றால், சரியல்ல. மனு சொத்து குறித்து 1 முதல் 5 மற்றும் 6 முதல் 11 எதிர்மனுதாரர்களுக்கு இடையே 1988 ல் இருந்து வழக்கு நடந்துவரும் விவரம் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு 29.07.2011–ல் 2 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. காலம்சென்ற 7–ம் எதிர்மனுதாரர் மேற்படி தீர்ப்பை எதிர்த்து மாண்பமை சார்பு நீதிமன்றம் சத்தியமங்கலத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்து, தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் பற்றி தெரியுமா என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. மீண்டும் 7–ம் எதிர்மனுதாரர் மாண்பமை உயர்நீதிமன்றத்தில் இரண்டாவது மேல்முறையீடு தாக்கல் செய்த விவரம் தெரியும். மேற்படி இரண்டாம் மேல்முறையீடு நிலுவையில் உள்ளது என்றால், சரிதான். 7–ம் எதிர்மனுதாரர் ஆக்கிரமிப்பாளர் என இந்நீதிமன்றத்திலும், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்திலும் தீர்மாணிக்கப்பட்டுள்ளது என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. எனவே, அதன் அடிப்படையில் 7–ம் எதிர்மனுதாரர் எனக்கு குத்தகை சீட்டு எழுதிக் கொடுத்திருந்தால் செல்லாதது என்றாலும், அது 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை கட்டுப்படுத்தாது என்றாலும், சரியல்ல.

2) மனு சொத்தை நான் ரூ.8/–லட்சம் செலவு செய்து சமன்செய்ததாக வழக்கிற்காக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரியல்ல. 7–ம் எதிர்மனுதாரர் மனு சொத்தில் 1973–ம் ஆண்டில் குத்தகைதாரராக வந்தார் என்றால், சரிதான். மேற்படி குத்தகை ஆவணம் நீட்டிக்கப்படாததால் 7–ம் எதிர்மனுதாரர் ஆக்கிரமிப்பாளர் என தீர்மாணிக்கப்பட்டு, தீர்ப்பு

வழங்கப்பட்டுள்ளது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. நான் வருடத்திற்கு ரூ.2,48,100/– 7 முதல் 9 எதிர்மனுதாரர்களிடம் செலுத்தி வருகிறேனா என்றால், ஆமாம். எப்போதிருந்து குத்தகை செலுத்தி வருகிறேன் என்றால், 2013 முதல் 2021 ம் ஆண்டு வரை வருடத்திற்கு ரூ.1,50,000/–மும் அதன்பின்னிட்டு குத்தகை சீட்டு எழுதப்பட்டு வருடத்திற்கு ரூ.2,48,100/–ம் செலுத்தி வருகிறேன். 7–ம் எதிர்மனுதாரர் குத்தகைதாரர் என தெரிந்து அவரிடம் உள் குத்தகைதாரராக குத்தகை சீட்டு எழுதி வாங்கியுள்ளேன் என்றால், சரிதான். மேற்படி விவரத்தை நில உரிமையாளர்களான 2 முதல் 5 எதிர்மனுதாரர்களிடம் தெரிவித்தேனா என்றால், இல்லை. 1973–ல் இருந்தே மனு சொத்து விவசாய பூமியாக இருந்ததால், 7–ம் எதிர்மனுதாரர் குத்தகைதாரராக உழவு செய்து வந்தார் என்றால், சரியல்ல. நான் பூமியை சமன் செய்து உழவு செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. 1972–ல் இருந்து 2013 வரைக்கும் அடங்கல் பதிவேடு தாக்கல் செய்தால், மனு சொத்து விவசாய பூமியாக இருந்ததா அல்லது கரடு முரடாக இருந்ததா என தெரிந்துவிடும் என்றால், சரிதான். எனது பூர்விகம் அன்னுர் என்றால், இல்லை. சத்தியமங்கலம் வடக்குப்பேட்டை. 9–ம் எதிர்மனுதாரர் எனது மருமகன் என்றால், சரிதான். 9–ம் எதிர்மனுதாரரை மனு சொத்திலிருந்து வெளியேற்றி விடுவார்கள் என தெரிந்து, அவருக்கு ஆதரவாக பொய்யாக மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

3) மனு சொத்தினை சுவாதீனம் எடுக்க நீதிமன்றத்திலிருந்து அமினா வந்திருந்தார்களா என்றால், ஆமாம். ஆனால், அப்போது நான் இல்லை. எனது வேலையாட்கள் மணி, பொன்னுசாமி இருந்தார்கள். அமினா மூன்று முறை வந்தார் என்றால், சரியல்ல. ஒருமுறைதான் வந்தார். கடந்த 21.12.2023 தேதியில் நீதிமன்ற அமினா மனு சொத்தின் சுவாதீனம் எடுக்க வந்தார் என்றால், சரிதான். அப்போது, 8–ம் எதிர்மனுதாரர்/தனலட்சுமி மற்றும் அவரது ஆட்கள் இருந்தார்கள் என அமினா மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், 8–ம் எதிர்மனுதாரர்கள் மனு சொத்தினை பூட்டி தகராறு செய்ததால், சுவாதீனம் எடுக்க முடியவில்லை என அமினா அறிக்கை கொடுத்துள்ளார் என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. எனவே, நான் 4–வது பாராவில் கூறியுள்ளதுபோல், நான் குத்தகைதாரராக மனு சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றால், சரியல்ல. அதற்கு பின்னிட்டுதான் குத்தகை சீட்டு தயாரித்து, பொய்யாக மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் 1972–ல் இருந்து இன்றுவரை 1 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு குத்தகை தொகையாக பணம் செலுத்தவில்லை என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் 1 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு குத்தகை பணம் செலுத்தியதாக ரசீது காட்டினார்களா என்றால், இல்லை.

**4)** 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் அவரது உரிமையாளர்களான 1 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு குத்தகை தொகை செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றால், சரிதான். இந்நீதிமன்ற வழக்கு காலதாமதப்படுத்த வேண்டும் என்பதற்காக 7 முதல் 9 எதிர்மனுதாரர்களுக்கு ஆதரவாக மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் சட்டத்திற்கு புறம்பாக 7 முதல் 9 எதிர்மனுதாரர்களை வெளியேற்ற முயற்சி செய்யவில்லை என்றால், எனக்கு தெரியாது. மனு சொத்து 10 ஏக்கர் என்றால், சரிதான். மனு சொத்து பவானி ஆற்றின் ஓரத்தில் உள்ளது என்றால், சரிதான். மனு சொத்தில் உள்ள கிணற்று நீர் வற்றாதது என்றால், சரிதான். அதனால் மனு சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் பொய்யாக மனுவிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால், சரியல்ல. மேற்படி ஆவணங்கள் 1 முதல் 5 எதிர்மனுதாரர்களை கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல. எனவே, இம்மனுவை 1 முதல் 5 எதிர்மனுதாரர்களின் நஷ்ட ஈட்டுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும், சரியல்ல. இம்மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து வருடத்திற்கு ரூ.2,48,000/- தொகையை நஷ்டஈடாக நான் செலுத்த கடமைப்பட்டவர் என்றாலும், சரியல்ல. எனவே, மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும், சரியல்ல.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.01.20 03:44:55 +0530

District Munsif